# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

## PRESS RELEASE

The Tamil Nadu Public Service Commission in its Notification dated 12.10.2015 and Supplemental Notification dated 20.10.2015 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to posts included in Combined Civil Services Examination-II (Group-IIA Services) (Non-interview posts) 2014 – 2015 and 2015-2016. The Written Examination was held on 24.01.2016 and results were published on 08.06.2016. The II Phase of Certificate verification for the said recruitment was held from 01.03.2017 to 10.03.2017. II Phase of Counselling for this recruitment is scheduled to be held from 15.05.2017 to 17.05.2017 at the O/o. Tamil Nadu Public Service Commission, Frazer Bridge Road, VOC Nagar, Chennai – 600 003 (Near Broadway Bus Stand/Fort Railway Station).

2. The Schedule for the counselling along with the list of candidates who have been provisionally admitted for the Counselling has been hosted in the Commission's Website. The intimation memos are sent to the candidates individually by speed post about the date and time of the Counselling. The same may be downloaded from the Commission's website (www.tnpsc.gov.in). The candidates have also been informed about the date, time and venue of the counselling by means of SMS and E-mail.

3. Candidates are admitted to the Certificate Verification based on the marks obtained by them in the Written Examination, claims made by them in their On-line applications and their admission for counselling is subject to availability of vacancies in their respective reservation categories as per their rank and rule of reservation of appointments. Mere admission to the II Phase of Counselling does not confer on them any right for selection.

4. Candidates who have been admitted for Counselling are directed to present themselves as mentioned in the Counselling schedule. Candidates who do not appear for Counselling on the date and time allotted to them will lose his/her opportunity, and they will not be given any further chance to appear for the same in future.

Secretary
Tamil Nadu Public Service Commission

## தேர்வாணையத்தின் செய்தி அறிவிப்பு

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு-II (தொகுதி IIA-ல் அடங்கிய) 2014-2015 மற்றும் 2015-2016 - [Combined Civil Services Examination-II (Group-IIA Services) (Non-interview posts)]- நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 12.10.2015 மற்றும் 20.10.2015 ஆம் நாளிட்ட அறிவிக்கைகள் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு கடந்த 24.01.2016 அன்று நடைபெற்றது. அதற்கான தேர்வு முடிவுகள் 08.06.2016 அன்று வெளியிடப்பட்டது. இத்தெரிவிற்கான இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு 01.03.2017 முதல் 10.03.2017 நடைபெற்றது.

இத்தெரிவிற்கான இரண்டாம் கட்ட கலந்தாய்வு சென்னை-3, பிரேசர் பாலச்சாலையில் (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 15.05.2017 முதல் 17.05.2017 வரை நடைபெறும்.

இரண்டாம் கட்ட கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் பதிவெண் பட்டியல் மற்றும் தரவரிசையின்படி கால அட்டவணை பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது (www.tnpsc.gov.in).

இரண்டாம் கட்ட கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தேதி, நேரம் குறிப்பிடப்பட்டு அழைப்பாணை விரைவஞ்சல் மூலம் தனியாக அனுப்பப்பட்டுள்ளது. இந்த அழைப்பாணையினை தேர்வாணைய இணையதளத்திலிருந்தும் (www.tnpsc.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இவ்விவரங்கள் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாகவும் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நடைபெற உள்ள இரண்டாம் கட்ட கலந்தாய்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள், மொத்த தரவரிசை, இடஒதுக்கீட்டு கொள்கை, விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் நிலவும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர். எனவே அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி கூற இயலாது.

விண்ணப்பதாரர்கள் இரண்டாம் கட்ட கலந்தாய்விற்கு வரத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர்
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்